# கள்ளச்சாராயம் விற்றால் குண்டர் சட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

**சென்னை, மே 17:** கள்ளச்சாராயம், போதைப்பொருள்களை விற்பனை செய்வோர் மீது குண்டர் சட்டம் பாயும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்தார்.

விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் நிகழ்ந்த கள்ளச்சாராய இறப்புகள் குறித்தும், இனி நிகழாமல் தடுப்பது குறித்தும் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: மாநில அளவில் மதுவிலக்கு தொடர்பாக தகவல் அளிக்க கட்டணமில்லாத தொலைபேசி எண் (10581) பயன்பாட்டில் உள்ளது. இதை மக்களிடையே பிரபலப்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மதுவிலக்கு உதவி காவல் கண்காணிப்பாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாட்ஸ்-ஆப் எண்களை அறிவித்து அதன் மூலம் புகார்களைப் பெற வேண்டும்.

இவற்றின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளை மதுவிலக்கு அமலாக்கத் துறை கூடுதல் டிஜிபி கண்காணிக்க வேண்டும். இது குறித்த அறிக்கையை வாரந்தோறும் திங்கள்கிழமை உள்துறை செயலரின் மூலம் முதல்வரின் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.



கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம். உடன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, உள்துறை முதன்மைச் செயலர் பெ.அமுதா, தமிழக டி.ஜி.பி. செ.சைலேந்திரபாபு உள்ளிட்டோர்.

**வாராந்திரக் கூட்டம்:** கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருள்கள் தடுப்பு தொடர்பாக ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தப்படும் இந்தக் கூட்டத்தில் காவல் துறை, வருவாய்த் துறை, டாஸ்மாக் மாவட்ட மேலாளர் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும். இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகளை தலைமைச் செயலர் வழங்க வேண்டும்.

பொது மக்களிடையே கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இதைப் பள்ளிகள், கல்லூரிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களை கொண்டு நடத்த வேண்டும்.

தொழிற்சாலைகளில் எரிசாராயம் மற்றும் மெத்தனால் பயன்பாட்டைக் கண்காணித்து, அது விஷ சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படாமல் தடுக்க வேண்டும்.

இதை காவல் துறை மற்றும் கலால் துறை உதவி ஆணையர்கள் கண்காணிக்க வேண்டும். இத்துடன், மாநிலத்தின் எல்லைப் பகுதிகள், கடலோர மற்றும் மலைப் பகுதிகளில் சிறப்பாகச் செயல்படும் மதுவிலக்குப் பிரிவு அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அந்தத் தொழிலிலிருந்து விடுவித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**குண்டர் சட்டம்:** கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருள்களை தொடர்ந்து விற்பனை செய்பவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், போதைப் பொருள் ஒழிப்பு உள்ளிட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்னைகள் குறித்து ஒவ்வொரு மாதமும், உள்துறைச் செயலர் மற்றும் டிஜிபி தலைமையில் காவல் கண்காணிப்பாளர்களின் மாதாந்திரக் கூட்டம் நடத்த வேண்டும்.

காவல் துறையின் செயல்பாடுகளைக் கண்காணித்து, முதல்வர் அலுவலகத்துக்கு அறிக்கை அளிக்க வேண்டும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலர் பெ.அமுதா, டிஜிபி செ.சைலேந்திர பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரசிடம் அறிக்கை: ஆளுநர் கடிதம்



கள்ளச்சாராய மரணங்கள் தொடர்பாக விளக்கம் கேட்டு தமிழக அரசிடம் ஆளுநர் ஆர்.என். ரவி அறிக்கை கேட்டுள்ளார். இதுதொடர்பாக, அரசின் தலைமைச் செயலர் வெ.இறையன்புக்கு ஆளுநர் கடிதம் எழுதியுள்ளார்.

கள்ளச் சாராய சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்? கள்ளச்சாராயம் எப்படி விற்கப்படுகிறது? கள்ளச் சாராயம் விற்கப்படவில்லை என்றால், ஏன் இவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் எனக் கேட்டு, அதுதொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டுமென அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

# பெருங்குடல் புற்றுநோய்: விழிப்புணர்வு கையேடு வெளியீடு

**சென்னை, மே 17:** பெருங்குடல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு கையேட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இதற்கான நிகழ்ச்சி, சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. உலக குடலியல் (காஸ்ட்ரோலஜி)அமைப்பு, தமிழ்நாடு காஸ்ட்ரோ என்டாலஜிஸ்ட் அறக்கட்டளை மற்றும் அப்பல்லோ மருத்துவமனை சார்பில் பெருங்குடல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த கையேட்டை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வின் போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இதில், அப்பல்லோ மருத்துவமனையின் மருத்துவப் பணிகள் இயக்குநர் வெங்கடாசலம், இரைப்பை குடல் நிபுணர் மற்றும் துறைத் தலைவர் கே.ஆர்.பழனிசாமி, இரைப்பை குடல் மருத்துவ ஆலோசகர்கள் பி.பிரம்மநாயகம், கார்த்திக் நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





பெருங்குடல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு கையேட்டை, சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அப்பல்லோ மருத்துவமனையின் மருத்துவப் பணிகள் இயக்குநர் டாக்டர் வெங்கடாசலம், இரைப்பை குடல் நிபுணர் மற்றும் துறைத் தலைவர் டாக்டர் கே.ஆர்.பழனிசாமி, இரைப்பை குடல் மருத்துவ ஆலோசகர்கள் டாக்டர் பி.பிரம்மநாயகம், டாக்டர் கார்த்திக் நடராஜன்.

**கையேடு ஏன்?:** நவீன வாழ்க்கை முறைகளால் உலகெங்கும் பெருங்குடல் புற்றுநோய் ஏற்பட்டு வருகிறது. மேற்கத்திய நாடுகள் மற்றும் ஆசியாவில் வளர்ந்த நாடுகளில் இந்த வகையான புற்றுநோய் அதிகளவில் உள்ளது.

அவற்றுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் பெருங்குடல் புற்றுநோய் பாதிப்பு குறைந்த அளவிலேயே ஏற்படுகிறது. ஆனால், அண்மைக்காலமாக இந்த நோய் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, இப்போதைய காலகட்டத்தில் 40 முதல் 50 வயதுக்கு உட்பட்டோருக்கு பெருங்குடல் புற்றுநோய் பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது. வழக்கமாக, இந்த நோய் பாதிப்பு 50 வயதைக் கடந்தவர்களுக்கு மட்டுமே ஏற்பட்டு வந்தது.

இந்த நோய் வராமல் தடுக்க சரியான வழிகளில் வாழ்வியல் முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

உடல் எடையை பராமரிப்பது, முறையான தொடர் உடற்பயிற்சி, புகையிலை மற்றும் மதுவைத் தவிர்த்தல், அதிக பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்ணுதல், புற்றுநோய் முன்னெச்சரிக்கை பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் போன்றவை குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

# ‘க்வாட்’ மாநாடு ரத்து: பிரதமர் மோடியின் ஆஸ்திரேலிய பயணத்தில் மாற்றமில்லை

மெல்போர்ன்/புதுதில்லி, மே 17: ஆஸ்திரேலியாவில் அடுத்த வாரம் நடைபெற இருந்த ‘க்வாட்’ அமைப்பின் உச்சிமாநாடு ரத்து செய்யப்பட்டுள்ள போதிலும், பிரதமர் நரேந்திர மோடியின் ஆஸ்திரேலிய பயணத்தில் எவ்வித மாற்றமில்லை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ‘க்வாட்’ (நாற்கர கூட்டமைப்பு) உச்சிமாநாடு ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் மே 24-ஆம் தேதி நடைபெற இருந்தது.

இந்நிலையில், அமெரிக்க அரசின் நிலுவைகளைச் செலுத்துவதற்காக மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறுவதற்கான உச்சவரம்பை அதிகரிப்பது குறித்து எதிர்க்கட்சி உடனான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்காக, ஆஸ்திரேலிய பயணத்தை ஒத்திவைப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இதையடுத்து, ‘க்வாட்’ அமைப்பின் உச்சி மாநாடு ரத்து செய்யப்படுவதாக ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி அல்பனேசி அறிவித்துள்ளார். ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவும் தனது ஆஸ்திரேலிய பயணத்தை ரத்து செய்துள்ளார்.

இருப்பினும், பிரதமர் நரேந்திர மோடி ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து பிரதமர் அல்பனேசி கூறுகையில், ‘அடுத்த வாரம் ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி உடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த உள்ளேன். தொழிலதிபர்கள் சந்திப்பு, சிட்னியில் நடைபெறும் பொது நிகழ்ச்சி ஆகியவற்றில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார்’ என்றார்.

**மூன்று நாடுகளுக்குப் பயணம்:** பிரதமர் மோடி, ஜப்பான், பப்புவா நியூ கினியா, ஆஸ்திரேலியா ஆகிய 3 நாடுகளுக்கு வெள்ளிக்கிழமை முதல் பயணம் மேற்கொள்ள உள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தில் மே 19 முதல் 21 வரை நடைபெறும் வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டமைப்பான ‘ஜி7’-இன் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

இதையடுத்து, பப்புவா நியூ கினியாக்கு செல்லும் அவர், மே 22-ஆம் தேதி நடைபெறும் இந்தோ-பசிபிக் தீவுகள் ஒத்துழைப்புக்கான பேரவையின் (எஃப்ஐபிஐசி) 3-ஆவது கூட்டத்தில் அந்நாட்டு பிரதமர் ஜேம்ஸ் மாரப் உடன் கலந்து கொள்கிறார்.

இதைத்தொடர்ந்து, மே 22 முதல் 24 வரை ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொள்கிறார். ‘க்வாட்’ தலைவர்கள் உடனான சந்திப்பைத் தவிர பிற நிகழ்ச்சிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

# கரீஃப் பருவ உர மானியம் ரூ.1.08 லட்சம் கோடி

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புது தில்லி, மே 17:** 'நடப்பு 2023-24 கரீஃப் பருவத்தில் உர மானியத்துக்காக ரூ.1.08 லட்சம் கோடி செலவிட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது' என்று மத்திய உரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா புதன்கிழமை கூறினார்.

உரங்களின் சில்லறை விற்பனை விலை உயராமல் இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து, மன்சுக் மாண்டவியா மேலும் கூறியதாவது:

2023-24 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான கரீஃப் பருவத்தில் உரங்களின் சில்லறை விற்பனை விலையில் மாற்றம் இல்லாததை உறுதிப்படுத்தும் நோக்கில், அவற்றுக்கான மானியமாக ரூ. 1.08 லட்சம் கோடியை மத்திய அரசு செலவிட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் யூரியா உரத்துக்கான மானியத்துக்கு ரூ. 70,000 கோடியும், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரங்களுக்கான மானியத்துக்கு ரூ. 38,000 கோடியும் செலவிடப்பட உள்ளது.

தற்போது யூரியா உரம் ஒரு மூட்டை ரூ. 276 என்ற விலையிலும், டிஏபி (டை-அமோனியம் பாஸ்பேட்) உரம் ஒரு மூட்டை ரூ. 1,350 விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள இந்த மானியம் மூலமாக 12 கோடி விவசாயிகள் பலன்பெற வாய்ப்புள்ளது.

அதுபோல, நைட்ரஜன் உரத்துக்கான மானியம் ஒரு கிலோவுக்கு ரூ. 76 என்ற அளவிலும், பாஸ்பரஸுக்கு கிலோவுக்கு ரூ. 41 வீதமும், பொட்டாசியத்துக்கு கிலோவுக்கு ரூ. 15 வீதமும், சல்ஃபருக்கு கிலோவுக்கு ரூ. 2.8 வீதமும் மானியம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த ஆண்டு இவற்றுக்கான மானியங்கள் கூடுதலாக வழங்கப்பட்ட நிலையில், தற்போது சர்வதேச சந்தையில் கடந்த 3 மாதங்களாக விலை சரிந்ததன் அடிப்படையில், மானியம் குறைக்கப்பட்டுள்ளது என்றார் மன்சுக் மாண்டவியா.




மத்திய அமைச்சரவை கூட்ட முடிவுகளை செய்தியாளர்களிடம் புதன்கிழமை விவரித்த அமைச்சர்கள் மன்சுக் மாண்டவியா, அஸ்வினி வைஷ்ணவ்.

**ஐ.டி. துறையில் ஊக்கத் தொகைத் திட்டத்துக்கு ரூ.17,000 கோடி:** தகவல் தொழில்நுட்பத் துறையில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகைத் திட்டத்துக்கு ரூ. 17,000 கோடி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டில் கைப்பேசி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அந்நிறுவனங்களுக்கு உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகைத் திட்டத்தை கடந்த 2020, ஏப்ரலில் மத்திய அரசு அறிமுகம் செய்தது. பின்னர், இந்த ஊக்கத்தொகைத் திட்டம் தகவல் தொழில்நுட்ப வன்பொருள்கள் உற்பத்திக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி, மடிக் கணினிகள், கையடக்க கணினி, அனைத்தையும் உள்ளடக்கிய கணினிகள் மற்றும் சர்வர்கள் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு ரூ. 7,350 கோடியை மத்திய அரசு ஒதுக்கியது.

இந்த ஒதுக்கீட்டை மேலும் உயர்த்த வேண்டும் என தகவல் தொழில்நுட்பத் துறை வன்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை ஏற்று, கூடுதல் தொகையை ஒதுக்கி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சரவை கூட்டத்துக்குப் பிறகு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

மடிக் கணினிகள், கையடக்க கணினிகள், அனைத்தையும் உள்ளடக்கிய கணினிகள், சர்வர்கள் உள்ளிட்ட கருவிகளை உற்பத்தி செய்யும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகைத் திட்டம் 2.0-இன் கீழ் ரூ. 17,000 கோடியை ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது 6 ஆண்டு காலத்துக்கான திட்டம்.

இந்தத் திட்டம், ரூ. 3.35 லட்சம் கோடி அளவுக்கு கூடுதல் உற்பத்திக்கும், ரூ. 2,430 கோடி அளவுக்கு கூடுதல் முதலீடுகளுக்கும், 75,000 பேருக்கு கூடுதல் நேரடி வேலை வாய்ப்புகளுக்கும் திட்ட காலகட்டத்தில் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறினார்.

**எகிப்துடன் சிசிஐ புரிந்துணர்வுக்கு ஒப்புதல்:** இந்திய தொழில் போட்டி ஆணையம் (சிசிஐ) எகிப்து நாட்டின் தொழில் போட்டி ஆணையத்துடன் (இசிஏ) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நிறுவன போட்டி சட்டத்தில் இரு நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் மூலமாக போட்டி சட்ட நடைமுறை மற்றும் நுகர்வோர் நலன் சார்ந்த சிறந்த நடைமுறைகளை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

# சீனியர் தடகளம்: ஜோதிக்கு தங்கம்



ஜோதி யாராஜி

ராஞ்சி, மே 17: ஜார்க்கண்டில் நடைபெறும் ஃபெடரேஷன் கோப்பை சீனியர் தடகள சாம்பியன்ஷிப்பில் மகளிருக்கான 100 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் ஆந்திர பிரதேச வீராங்கனை ஜோதி யாராஜி புதன்கிழமை தங்கப் பதக்கம் வென்றார்.

பந்தய இலக்கை அவர் 12.89 விநாடிகளில் கடந்து போட்டி சாதனை படைத்தார். தமிழகத்தின் நித்யா ராம்ராஜ் 13.44 விநாடிகளில் வந்து வெள்ளியும், ஜார்க்கண்டின் சப்னா குமாரி 13.58 விநாடிகளில் எட்டி வெண்கலமும் பெற்றனர். ஆடவருக்கான 110 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் மகாராஷ்டிரத்தின் தேஜஸ் அசோக் ஷிர்சே 13.72 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார்.

# உலகமயமாக்கல் வலுவாக இருக்க வேண்டும்

## எஸ்.ஜெய்சங்கர்

பிரஸ்ஸல்ஸ், மே 17: உலகமயமாக்கல் வலுவாக இருப்பதை உறுதி செய்ய, இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே நம்பகமான ஒத்துழைப்பை உருவாக்க முயற்சிக்கப்படுகிறது என்று மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

பெல்ஜியம்தலைநகர்பிரஸ்ஸலஸில் இந்தியா-ஐரோப்பிய யூனியன் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கவுன்சிலின் (டிடிசி) முதலாவது அமைச்சர்கள் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் ஆகியோர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில், எண்ம (டிஜிட்டல்) மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத தொழில்நுட்பத்தில் இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக விவாதிக்கப்பட்டது.



பிரஸ்ஸல்ஸில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தியா-ஐரோப்பிய யூனியன் வர்த்தகம், தொழில்நுட்ப கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்ற மத்திய அமைச்சர்கள் ஜெய்சங்கர், பியூஷ் கோயல் உள்ளிட்டோர்.

இதில் அமைச்சர் ஜெய்சங்கர் பேசுகையில், 'இந்தியா, ஐரோப்பிய யூனியன் இடையிலான உத்தி சார்ந்த கூட்டுறவில் டிடிசி குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். உலக பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு அவசியமாக உள்ள முக்கிய துறைகள் மீது டிடிசி கவனம் செலுத்துகிறது' என்றார்.

இதனைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'தற்போதைய நிச்சயமற்ற காலகட்டத்தில் உலக பொருளாதாரம் அபாயத்தில் சிக்குவதை குறைப்பது முக்கியம். மிகவும் பொறுப்பான வளர்ச்சி இருப்பதை உறுதி செய்ய வேண்டும். உலகமயமாக்கல் வலுவாக இருப்பதை உறுதி செய்ய, இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே நம்பகமான ஒத்துழைப்பை உருவாக்க முயற்சிக்கப்படுகிறது' என்று தெரிவித்தார்.

## 'இந்தியாவில் சுங்க வரி குறைவு'

இந்தியாவில் பெரும்பாலான பொருள்களுக்கு அதிக சுங்க வரி விதிக்கப்படுகிறது என்ற தவறான புரிதல் காணப்படுகிறது. உண்மையில், குறைவான சுங்க வரியே விதிக்கப்படுகிறது என மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஸ் கோயல் தெரிவித்தார்.

பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றபின்செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'மூலப்பொருள்கள், உப பொருள்கள் உள்ளிட்டவற்றின் மீதான சுங்க வரி இந்தியாவில் அதிகமாக உள்ளதாக தவறான புரிதல்கள் காணப்படுகிறது. உண்மையில், குறைவான வரியே விதிக்கப்படுகிறது.

தொழில்நுட்பபொருள்கள்மீது விதிக்கப்படும் வரியானது இந்திய பொருளாதார வளர்ச்சியில் குறைந்த அளவே பங்கு வகிக்கிறது. உண்மையில், உலக வர்த்தக அமைப்பால் (டபிள்யுடிஓ) நிர்ணயிக்கப்பட்ட அளவை விட குறைவாக உள்ளன' என்றார்.